**வீதித்துறை உதவிச் செயற்திட்டம் - 2018**

-----------------------------------------------------------------------

வீதித்துறை உதவிச் செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2006 சனவரி 16 ஆந் திகதிய 4138–சீஈ ஆம் இலக்க அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.01 (பீ)(i) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

-----------------------------------------------------------------------

அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சான தற்போதைய வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. வினைத்திறனான தேசிய வீதி முறைமையின் நிலைத்துநிற்கவல்ல விநியோகத்தின் ஊடாக போக்குவரத்துச் செலவுகளைக் குறைப்பது செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. ஆரம்ப அபிவிருத்தி கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,125 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 69.10 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆக உள்ளதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், 2008 யூன் 23 ஆந் திகதிய முதலாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கையின் கீழ் ரூபா 11,579 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 59.60 மில்லியன் (ஐ.அ.டொலர் 98.1 மில்லியன்) ஆன மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் 15 இல் இரண்டாவது குறைநிரப்பு அபிவிருத்திக் கடன் உடன்படிக்கை கைசாத்திடப்பட்டிருந்ததுடன் அதன் மீது ரூபா 11,081 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 63.6 மில்லியன் (ஐ.அ.டொலர் 100 மில்லியன்) ஆன மேலதிக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆரம்பத்தில், செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2006 சனவரி 16 இல் தொடங்கியிருந்ததுடன் 2011 மார்ச் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. மேலும், செயற்திட்டக் காலமானது 2015 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்த்தின் செயற்பாடுகள் தொடரப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

-----------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம்

பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தினால் செய்யப்பட்ட தேசிய மற்றும் கிராமிய வீதிகளின் புனரமைப்பு மற்றும் புனர்நிர்மான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூடப்பட்டிருப்பினும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செலுத்தப்படாமல் இருந்த காலி – தெனியாய வீதி மற்றும் இங்கிரிய – ரத்னபுரி வீதிகளின் புனரமைப்பு வேலைகள் மீது செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு மீதான சர்ச்சை | கணக்கீட்டு கொள்கைகளின் தவறான பயன்பாடு. | பதிலளிக்கவில்லை. | செயற்திட்ட கண்கானிப்பு பிரிவின் செயற்பாடுகளை முடிவுறுத்தவும் அதனுடன் தொடர்புபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

காரணமாக செயற்திட்டத்தின் செயற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் நிறைவேற்று முகவரால் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பிணக்குகள் தீர்வு சபையினால் குறிப்பிடப்பட்ட பிணக்குகளை தீர்ப்பதற்கான பொறுப்பினை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றம் செய்வதனை கருத்தில் கொள்ளாது தொடர்ந்தியங்கும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 08 மாகாணங்களிலுள்ள தேசிய விதிகளின் 620 கிலோமீற்றர்களுக்கான புனரமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை, மற்றும் 03 மாகாணசபைகள் மற்றும் 09 பிரதேச சபைகளின் கன்னோட்டத்தின் கீழான மாகாண மற்றும் கிராமிய வீதிகள் 635 கிலோமீற்றர்கள் என்பன செயற்திட்டத்தினால் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய வீதிகளின் 685 கிலோமீற்றர்கள் மற்றும் மாகாண மற்றும் கிராமிய வீதிகளின் 162 கிலோமீற்றர்கள் என்பவற்றிற்கான புனரமைப்பு வேலைகள் 2015 ஜூன் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | | |
|---|---|---|---|---|
| (அ) | மொத்தமாக ரூபா 733.87 மில்லியன் கால நீடிப்புக்காகவும் நீடிப்பு, விரைவுபடுத்தல் மற்றும் ஏனைய நோக்கங்களுக்காக ஏற்பட்ட செலவுகள் என்பவற்றிற்காக இங்கிரிய – ரத்னபுர வீதியின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்ததாரரினால் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக மொத்தமாக ரூபா 841.98 மில்லியன் வட்டிச் செலவுகளிற்காக ஒப்பந்ததாரரினால் பெறப்பட்டிருந்தது. | மேலதிக கிரயங்கள் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு. | நடுவர்தீர்ப்பு தொடர்பிலான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 9 வருடங்களின் பின்னர் ஒப்பந்தக்காரர்கள் சார்பில் 2018 பெப்ரவரியில் அளிக்கப்பட்ட விருது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றதுடன் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம், தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாட்டிற்கு குறைந்த கிரயங்களுடன் பிணக்குகளை தீர்ப்பதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்தல் வேண்டும். ஒப்பந்ததாரரினால் மேலதிக கொடுப்பனவுகள் செய்வதற்கான காரணங்களை ஆராய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், உரிய ஒப்பந்ததாரர்களுக்கும் கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகளுக்கும் மொத்தமாக ரூபா 1,000 மில்லியன் செலுத்துவதற்கு 2019 ஒக்டோபர் 10 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை அமைச்சர்களின் கூட்டத்தில் அமைச்சரவை அமைச்சர்கள் தீர்மானித்திருந்தனர். | | | |
| (ஆ) | மொத்தமாக ரூபா 67.69 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 858.017 இனை செலுத்துவதற்கான பிணக்குகள் தீர்ப்பனவு சபையின் தீர்மானத்துடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை உடன்படாததால் காலி – தெனியாய வீதியின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் மீதான கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகள் மீதான பிணக்குகள் எழுந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. இப்பிணக்குகள் சினேகபூர்வ தீர்ப்பனவு சபையினால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறியபடி. | சினெகபூர்வ தீர்ப்பனவு சபையானது அதனது அறிக்கையை நெடுஞ்சாலை அமைச்சிற்கு உரிய திகதியில் சமர்ப்பித்திருந்தது, இக்கொடுப்பனவை செய்வதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | கந்தளை – திருகோணமலை வீதியின் புனர்நிர்மான வேலைகள் 2013 இல் பூர்த்தியாக்கப்பட்டதன் காரணமாக வீடுகள் மற்றும் கட்டிடங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் மீது 87 நபர்களுக்கு ரூபா 23 மில்லியன் தொகையான இழப்பீடு மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், அளவைப்பட்டியலின் கொடுப்பனவு உருப்படி இல 119(2) இன் கீழ் ரூபா 5 மில்லியன பெறுமதியான ஒரு | அங்கீகரிக்கப்படாத கொடுப்பனவுகளிற்கான சத்தியப்பாடு. | புனர்நிர்மான காலத்தின் இறுதியில் மற்றும் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதியின் போது, செயற்திட்டமானது வீதியின் இரு பக்கங்களிளும் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் மற்றும் வியாபார கட்டிடங்களின் உரிமையாளர்களிடமிருந்து 88 முறைப்பாடகளை பெற்றிருந்தது, கட்டிடங்கள் வீதி நிர்மான வேலையின் காரணமாக கிராக் செய்யப்பட்டிருந்தமையை இது காட்டுகின்றது. வீதி | வீடுகள் மற்றும் கட்டிடங்களுக்கான சேதங்கள் ஒப்பந்ததாரரின் செலவில் குறைபாட்டு பொறுப்பு காலப்பகுதிக்குள் மீள்திருத்தப்பட்டிருக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒதுக்கீடு வீதிகளிலுள்ள ஆதனங்களில் சேதங்கள் மீதான கிரயத்தினை எதிர்கொள்வதற்கான காப்புறுதி பெட்டகையினை பெற்றுக்கொள்வதற்கு ஒப்பந்ததாரரிற்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் சேதங்கள் மீதான இழப்பீட்டு கொடுப்பனவுகள் மீதான பொறுப்பு ஒப்பந்ததாரரிற்கு காணப்பட்டதனை இது உறுதிப்படுத்துகின்றது. | | அபிவிருத்தி அதிகார சபையானது புலனாய்வு ஒன்றினை மேற்கொள்வதற்காக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வேண்டுகோளினை செய்திருந்ததுடன் அதன் மீதான இறுதி அறிக்கை பரிந்துரைகளுடன் 2014 ஏப்ரல் 17 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | |
| (ஈ) | வீதிகளின் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு வேலை 1 வருடத்திற்கும் மேலான தாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்த அதே வேளை ஏனைய 05 வீதிகளின் புனரமைப்புக்கள் 200 நாட்களுக்கும் மேலான தாமதத்துடன் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறப்பட்ட வீதிகளின் புனரமைப்பு வேலைகளிற்காக மதிப்பிடப்பட்ட கிரயங்கள் மொத்தமாக ரூபா 14,816 மில்லியன் ஆனது வேலைப்பரப்பின் மாற்றங்கள், மாறல்கள் மற்றும் மேலதிக வேலைகளின் காரணமாக வேலைகளின் பூர்த்தியாக்கல் நேரத்தில் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 48.92 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 22,065 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. | நிர்மான வேலைகளின் தாமதமானது, செயற்திட்ட கிரய அதிகரிப்பு மற்றும் செயற்திட்டத்தின் தொடர்புடைய பயனாளிகளிற்கு நன்மைகள் பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தியது. | ஆரம்பகட்ட நிலஅளவை அடிப்படையிலான ஆரம்ப மதிப்பீடுகளின் தயாரிப்பு மற்றும் வழக்கமான வரைபடங்களை பயன்படுத்தல் போன்ற பல்வேறு காரணங்கள் காரணமாக வீதி நிர்மான செயற்திட்டங்களில் தாமதங்கள், மாறல்கள் மற்றும் செயற்திட்ட பூர்த்தியாக்கல் மற்றும் காலநீடிப்பு மற்றும் பல இருக்கக்கூடும். விபரமான வடிவமைப்பு மற்றும் நிர்மானத்தின் போது, வடிவமைப்பு, அளவுகள் மற்றும் நோக்கம் என்பன உண்மை பிரதி மண் நிலைமைகளின் வேண்டுதலிற்காக மாற்றமடைகின்றது. | செயற்திட்டத்திள் வேலைகளின் பரப்பானது எதிர்பார்க்கப்பட்ட திகதிகளில் அவைகளை பூர்த்தி செய்ய முறையாக திட்டமிடப்படல் வேண்டும். |